[2008 ஏப்ரல் 21

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதி கட்டுவதற்கு இடம் தயாராக இருக்கும் என்று சொன்னால், அதற்கு முன்னுரிமை வழங்கி, நமது தலைவர் கலைஞர் அரசாங்கம் மிக வேகமாக அந்தப் பணிகளை முடித்துக் கொடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *125,* மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

பஞ்சாலை

***27844—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பரவாய் ஊராட்சியில் பஞ்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வரகூர் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், பரவாய் ஊராட்சியில் அரசு பருத்தி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் மாநிலத்திலேயே அதிகப்படியான பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு அரசின் கணக்கெடுப்பின்படி 7,400 ஏக்கர் நிலப்பரப்பில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, எங்கள் வரகூர் தொகுதியின் மையப் பகுதியான பரவாய், குன்னம், கொளக்காநத்தம் போன்ற பகுதிகளில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2008 ஏப்ரல் 21]

மிக அதிகப்படியாக சாகுபடி செய்யப்படுகிறது. எனவே, அந்தப் பகுதி மக்களுடைய பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில்கொண்டும், அங்கே உள்ள ஏழையெளிய மக்களின் வேலைவாய்ப்பைக் கருத்தில்கொண்டும் அங்கே ஒரு பஞ்சாலையை அமைத்து அந்தப் பகுதி மக்கள் வளம் பெறுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகேபி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே உள்ள பஞ்சாலைகளுக்குத் தேவையான பஞ்சை உற்பத்தி செய்வதிலே நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிற நிலை இருக்கிறது. கண்டிப்பாக அரசின்மூலமாக கூட்டுறவுப் பருத்தி தொழிற்சாலை துவங்குகிற எண்ணமும், திட்டமும் கிடையாது. ஆனால், பருத்தி விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பருத்தியை தமிழகத்திலே உள்ள பஞ்சாலைகள் நல்ல முறையில், நல்ல விலைக்குப் பெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி.

முற்பகல் 9-45

திரு. மா. சந்திரகாசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் விளைகின்ற பருத்தியை தேனி, ஈரோடு போன்ற பல்வேறு அண்டை மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகள் விற்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. எனவே, வானம் பார்த்த பூமியை நம்பி வாழும் அந்த விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையான பஞ்சாலையை ஏற்படுத்த அரசு முன்வராவிட்டாலும், விசைத் தறி நூற்பாலையையாவது உருவாக்க வேண்டும். எங்கள் பகுதியில் நெசவாளர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அந்த நெசவாளர்களுக்கும், அங்கே பருத்தியை உற்பத்திச் செய்கின்ற விவசாயிகளுக்கும், வேலையில்லாமல் இருக்கின்ற கூலித் தொழிலாளர்களுக்கும் உதவுகின்ற வகையில் ஒரு நூற்பாலையையாவது அல்லது பஞ்சாலையையாவது அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகேபி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை என்பது இப்போதுதான் புதிய கோரிக்கையாக வந்திருக்கிறது. நெசவாளர்களுக்கும், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கும் இருக்கின்ற பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, வர இருக்கின்ற காலங்களில் என்ன அப்பகுதியில் செய்ய முடியுமோ அதைத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

126—

நூலகம்

***7511—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் கிராமத்தில் நூலகம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு பொது நூலக விதிகள் 45 (A) 4(C)-ன்படி 1000 முதல் 5000 வரை மக்கள் தொகை உள்ள ஊர்களில் பகுதிநேர நூலகம் திறக்க வழிவகை உள்ளது.

கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் கிராமத்தில் கீழ்க்காணும் நிபந்தனைகளை அவ்வூர் மக்கள் நிறைவு செய்யும்பட்சத்தில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்:

1. நூலகம் செயல்பட வாடகையில்லாத இலவசக் கட்டடம்

2. தலா ரூ.1000/-வீதம் நன்கொடையாகச் செலுத்தி 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.